**ஜூலை – 12**

# TNPSC துளிகள்

- கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியைச் சேர்ந்த இயற்கை விவசாயி வி.டி. வள்ளுவன், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (UN FAO) 'மண் பாதுகாப்பு நாயகன்' (Soil Hero Guardian) போட்டியில் மூன்றாம் இடத்தைப் பிடித்தார்.
  - பல்நிலை, பல பயிர் மற்றும் மரம் சார்ந்த இயற்கை விவசாய முறைகள் மூலம் மண்ணின் கரிம கார்பன் அளவை 1.56% ஆக உயர்த்தியதற்காக வேண்டி அவர் அங்கீகரிக்கப் பட்டார்.
- 2026 ஜூலை 6 அன்று, இந்தியாவின் மொத்த மின்சாரத் தேவையின் 50.2%-ஐ தூய்மையான எரிசக்தி ஆதாரங்கள் பூர்த்தி செய்தன என்பதுடன் இந்த மைல்கல்லை எட்டுவது இது இரண்டாவது முறையாகும்.
- நோவோ நோர்டிஸ்க் நிறுவனத்தின் உலகின் முதல் வாரத்திற்கு ஒருமுறை செலுத்தப் படும் அடிப்படை இன்சுலினான அவிக்லியை (இன்சுலின் ஐகோடெக்) இந்தியா அறிமுகப் படுத்தியது.
  - இது, வகை 1 மற்றும் வகை 2 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட பெரியவர்களுக்கு ஆண்டுக்கு 365 இல் இருந்து 52 ஆக இன்சுலின் ஊசிகளைக் குறைக்கிறது.
- வாரணாசி விமான நிலையம், பயன்பாட்டில் உள்ள விமான ஓடுபாதையின் கீழ் இந்தியாவின் முதல் ஆறு வழி சுரங்கப்பாதையைப் பெற உள்ளது என்பதோடு 450 மீட்டர் நீளமுள்ள இந்த அமைப்பு, மேலே விமானச் செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெறும் அதே வேளையில், கீழே சாலைப் போக்குவரத்து இயக்கத்தை சாத்தியம் ஆக்கும்.
- சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆனது, பியர்-ஒலிவியர் கோரின்சாஸுக்குப் பதிலாக, இங்கிலாந்து வங்கியின் முன்னாள் கொள்கை வகுப்பாளரான சில்வானா டென்ரேரோவை தனது புதிய தலைமைப் பொருளாதார நிபுணராகவும் பொருளாதார ஆலோசகராகவும் நியமித்துள்ளது.
- ஜெய்ப்பூர் உலக அளவில் 6வது இடத்தைப் பிடித்ததுடன், 'மகிழ்ச்சியான நகரங்கள் குறியீடு 2026'-இன் முதல் 10 இடங்களில் இடம்பெற்ற ஒரே இந்திய நகரமாகவும் மாறி உள்ளது.
  - இக்குறியீட்டில் லண்டன் (இங்கிலாந்து) முதலிடத்தையும், அதனைத் தொடர்ந்து நியூயார்க் நகரம் (அமெரிக்கா) மற்றும் பாரிஸ் (பிரான்ஸ்) ஆகியவை இடம் பெற்றன.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மாநிலத் தேர்தல் ஆணையர் பதவி விலகல் விவகாரம்


- தமிழ்நாடு அரசு, மாநிலத் தேர்தல் ஆணையர் பி. ஜோதி நிர்மலாசாமியைத் தனது பதவியிலிருந்து விலகுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.
- பி. ஜோதி நிர்மலாசாமி 2024 மார்ச் மாதம் மாநிலத் தேர்தல் ஆணையராகப் பொறுப்பேற்றார் என்ற நிலையில் இவரது பதவிக்காலம் 2029 மே மாதம் வரை உள்ளது.
- மாநிலத் தேர்தல் ஆணையம் என்பது உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்குப் பொறுப்பான, அரசியலமைப்புச்

சார்ந்த மற்றும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பாகும்.

- ❖ உள்ளாட்சித் தேர்தல்களுக்கான வார்டு எல்லை மறுவரையறைப் பணிகளை மேற் பார்வையிடும் தமிழ்நாடு எல்லை மறுவரையறை ஆணையத்தின் தலைவராகவும் அவர் உள்ளார்.
- ❖ சில மாநகராட்சிகளின் மேயர்கள் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, பல நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மறைமுக இடைத் தேர்தல்களையும் அவர் மேற் பார்வையிட்டார்.
- ❖ இந்திய அரசியலமைப்பின் 243K பிரிவின்படி, மாநிலத் தேர்தல் ஆணையர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார் என்பதோடு அவர் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்கும் அதே முறையிலும் அதே காரணங்களுக்காகவும் அன்றி, பதவியிலிருந்து நீக்கப்பட மாட்டார்.
- ❖ மேலும், மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட எந்தவொரு சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு, நியமனத்திற்குப் பிறகு மாநிலத் தேர்தல் ஆணையருக்குப் பாதகமாக அவரது பணி நிபந்தனைகள் மாற்றப்படக் கூடாது.




## தமிழ்நாட்டின் தொடக்கக் கல்விச் சேர்க்கை




- ❖ கல்வி அமைச்சகம் (MoE) வெளியிட்ட 'கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்டத் தகவல் அமைப்பு' (UDISE) 2025–26 அறிக்கையின்படி, தொடக்கக் கல்வி நிலையில் தமிழ்நாடு 92% மொத்தச் சேர்க்கை விகிதத்தைப் (GER) பதிவு செய்துள்ளது.
- ❖ மாநிலத்தில் மொத்தச் சேர்க்கை விகிதம் (GER) உயர் தொடக்கக் கல்வி நிலையில் 95 சதவீதமாகவும், இடைநிலைக் கல்வி நிலையில் 97 சதவீதமாகவும், மேல்நிலைக் கல்வி

நிலையில் 85 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது.

- தமிழ்நாடு தொடக்க மற்றும் உயர் தொடக்கக் கல்வி நிலைகளில் 'சுழிய இடைநிற்றல்' விகிதத்தைத் தக்கவைத்துள்ள அதேவேளையில், இடைநிலைக் கல்வியில் இடை நிற்றல் விகிதம் 6.2% ஆக இருந்தது.
- இம்மாநிலத்தில் 57,566 பள்ளிகள், 1,24,02,872 மாணவர்கள் மற்றும் 5,69,909 ஆசிரியர்கள் உள்ளனர்; இங்கு மாணவர்-ஆசிரியர் விகிதம் (PTR) 22 ஆக உள்ளதுடன், இது தேசிய சராசரியான 24-ஐ விட அதிகமாகும்.
- 2025–26 ஆம் ஆண்டில், 83,600 மாணவர்கள் பாலிடெக்னிக் கல்வி நிறுவனங்களிலும், 60,355 மாணவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் (ITIs) சேர்ந்தனர்; இதன் மூலம் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பிரிவுகளில் சேர்ந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,43,955 ஆக உயர்ந்தது.

## பழங்கால கோயில் பொருட்கள் மீட்பு

- இந்தியப் பிரதமரின் ஆஸ்திரேலியப் பயணத்தின் போது, தமிழ்நாட்டுக் கோயில்களில் இருந்து திருடப்பட்ட மூன்று தொன்மையான கலைப்பொருட்களை ஆஸ்திரேலியா இந்தியாவிடம் ஒப்படைக்கிறது.
- இத்தொல்பொருட்களில் பத்ரகாளி அம்மனின் 11-12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கால வெண்கல சூலம், கருங்கல்லால் ஆன நந்தி சிலை மற்றும் ஆறு முகங்களைக் கொண்ட கார்த்திகேயர் (சண்முகர்) ஆகியோரின் சிலைகள் அடங்கும்.
- தமிழ்நாட்டுக் கோயில்களிலிருந்து இவை சட்டவிரோதமாகக் கடத்தப்பட்டதை தமிழ்நாடு சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு (CID) நடத்திய விசாரணைகள் உறுதிப் படுத்தியதைத் தொடர்ந்து, 'பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தத்தின்' (MLAT) கீழ் இந்தத் தொல்பொருட்கள் திருப்பி அனுப்பப் படுகின்றன.
- இந்தியாவிலிருந்து சட்டப்பூர்வமாக ஏற்றுமதி செய்யப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பதை ஒரு சுயாதீனமான உரிமைச் சான்று ஆய்வு (provenance review) உறுதிப் படுத்தியதைத் தொடர்ந்து, அந்தத் தொல்பொருட்களைத் திருப்பித் தர ஆஸ்திரேலிய நாட்டின் தேசியக் கலைக்கூடம் (National Gallery of Australia) ஒப்புக் கொண்டது.
- பத்ரகாளி சூலம் கொல்லுமாங்குடி (திருவாரூர்) ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமி கோயிலிலும், கார்த்திகேய சிற்பம் மானம்பாடி (தஞ்சாவூர்) நாகநாதசுவாமி கோயிலிலும் உருவானது.




## மகளிர் பேருந்து பயணத் திட்டத்தின் பெயர் மாற்றம்


- தமிழக அரசானது, பெண்களுக்கான இலவசப் பேருந்து பயணத் திட்டத்தின் பெயரை

"மகளிர் விடியல் பயணம்" என்பதிலிருந்து "மகளிர் பயணம்" என மாற்றியுள்ளது.

- மே 2021-இல் தொடங்கப்பட்ட இலவசப் பயணத் திட்டம், மாநிலப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் சாதாரணக் கட்டணப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணிக்க வழிவகை செய்கிறது.
- இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் 7,300-க்கும் மேற்பட்ட சாதாரணக் கட்டணப் பேருந்துகளில் (சென்னையில் உள்ள சுமார் 1,500 பேருந்துகள் உட்பட) நடைமுறையில் உள்ளது.




## தமிழ்நாடு அரசு ஆணை - வெளிப்படைத்தன்மை விவகாரம்




- புதிய அரசு பதவியேற்ற பிறகு, தமிழக அரசின் பெரும்பாலான துறைகள் தங்கள் சமீபத்திய அரசாணைகளை (G.O.s) அதிகாரப்பூர்வ அரசு இணையதளத்தில் பதிவேற்ற வில்லை.
- மொத்தமுள்ள 38 துறைகளில் 5 துறைகள் மட்டுமே மே–ஜூன் 2026-க்கான அரசாணைகளை இணையதளத்தில் வெளியிட்டுள்ளன.
- 'சிங்கப்பெண்' சிறப்புப் படை மற்றும் தகுதியுள்ள வீட்டு உபயோக மின் நுகர்வோருக்கு வழங்கப்படும் கூடுதல் 100 இலவச மின்சார அலகுகள் தொடர்பானவை உட்பட, முக்கியமான அரசாணைகள் இணையத்தில் பதிவேற்றப்பட வில்லை.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை,

கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நிதித் துறை மற்றும் பொதுத் துறை ஆகியவை தங்கள் அரசாணைகளைப் புதுப்பித்துள்ளன.

- சில துறைகள் தங்கள் அரசாணைகளைப் பல ஆண்டுகளாகப் புதுப்பிக்கவில்லை; குறிப்பாக, பொதுத் (தேர்தல்) துறை 2015-க்குப் பிறகு எந்தப் புதிய அரசாணையையும் வெளியிடவில்லை.

# தேசியச் செய்திகள்

## பிரதமர் மோடியின் இந்தோனேஷியா பயணம் 2026




- இந்தோனேசியாவிற்குப் பயணம் மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் மிக உயரிய குடிமை விருதான ‘இந்தோனேசியக் குடியரசின் பிந்தாங் அடிபூர்ணா’ வழங்கப்பட்டது.
- இந்தப் பயணத்தின் போது, இந்தியாவும் இந்தோனேசியாவும் பாதுகாப்பு, வர்த்தகம், கல்வி, கலாச்சாரம், தொழில்நுட்பம் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய சுமார் 20 ஒப்பந்தங்களை அறிவித்தன.
- பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை அமைப்புகள் மீதான ஒத்துழைப்பு உட்பட, இந்தியாவும் இந்தோனேசியாவும் பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பை விரிவுபடுத்தின.
- இந்திய மேலாண்மை நிறுவனம் பெங்களூரு, இந்தோனேசியாவில் தனது முதல் வெளி நாட்டு வளாகத்தை நிறுவுவதற்கான திட்டங்களை அறிவித்தது.
- யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமான, பழமையான பிரம்பனன் கோயிலின் பாதுகாப்பிற்கு இந்தியா ஆதரவளிக்கும்.
- இந்தோனேசிய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை பிரதமர் பெற்றார்.
- இந்தப் பயணம், 2018-ல் நிறுவப்பட்ட இந்தியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான விரிவான மூலோபாய கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தியது.
- இந்த விருதுடன், பிரதமர் மோடியின் சர்வதேச கௌரவங்கள் மற்றும் அங்கீகாரங்களின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது.

## இந்தியா–நியூசிலாந்து மூலோபாயக் கூட்டாண்மை

- இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் விதமாக, கடந்த 40 ஆண்டுகளில் ஒரு இந்தியப் பிரதமர் மேற்கொள்ளும் முதல் பயணமாக நியூசிலாந்திற்குப் பிரதமர் நரேந்திர மோடி பயணம் மேற்கொண்டார்.
- இந்தோனேசியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகளை உள்ளடக்கிய அவரது சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக இந்தப் பயணம் அமைந்தது.
- வர்த்தகம், பாதுகாப்பு, விளையாட்டு, கலாச்சாரம், கல்வி மற்றும் மக்களிடையேயான பரிமாற்றங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பிரதமர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்.
- இந்தியாவும் நியூசிலாந்தும் தங்கள் விளையாட்டுத் துறை உறவின் 100-வது ஆண்டைக் கொண்டாடி வருகின்றன; இதில் ஹாக்கி விளையாட்டு இரு நாடுகளுக்கும் இடையிலான விளையாட்டு ரீதியான நட்புறவில் மிகவும் ஒரு முக்கிய இணைப்பாகத் திகழ்கிறது.
- இந்தப் பயணம், இந்தியாவின் 'கிழக்கு நோக்கிய கொள்கை', 'MAHASAGAR' (பிராந்தியங்கள் முழுவதும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியின் பரஸ்பர மற்றும் முழுமையான முன்னேற்றம்) தொலைநோக்குப் பார்வை, மற்றும் சுதந்திரமான, திறந்த இந்தோ-பசிபிக் நோக்கிய உறுதிப்பாடு ஆகியவற்றை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## இந்தியா-ஆஸ்திரேலியா PACTS கூட்டாண்மை

- இணையப் பாதுகாப்பு, முக்கியத் தொழில்நுட்பங்கள் மற்றும் விநியோகச் சங்கிலி மீள்திறன் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் இணையம், முக்கியத் தொழில்நுட்பங்கள் மற்றும் விநியோகச் சங்கிலிகள் மீதான ஆஸ்திரேலியா-இந்தியா கூட்டாண்மையை (PACTS) தொடங்கின.
- இந்தக் கூட்டாண்மை, இணையவெளி மற்றும் இணையம் வழியேயான முக்கிய தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான 2020 கட்டமைப்பு ஏற்பாட்டிற்குப் பதிலாக, பாதுகாப்பான, பொறுப்பான தொழில்நுட்ப மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது.
- PACTS ஆனது விநியோகச் சங்கிலி மீள்திறன், முக்கியத் தொழில்நுட்பம், இணையப் பாதுகாப்பு, டிஜிட்டல் மீள்திறன் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி ஒத்துழைப்பு ஆகிய

ஐந்து தூண்களைக் கொண்டுள்ளது.

❖ இது செயற்கை நுண்ணறிவு (AI), விண்வெளித் தொழில்நுட்பம், தொலைதொடர்பு, உயிரித் தொழில்நுட்பம், மேம்பட்ட பொருட்கள் மற்றும் முக்கிய கனிமங்கள் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.

❖ இந்தக் கூட்டாண்மையானது இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையே டிஜிட்டல் பாதுகாப்பு, புத்தாக்கம் மற்றும் வலுவான தொழில்நுட்பச் சூழலமைப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.





## இந்தியா–ஆஸ்திரேலியா அணுசக்தி கூட்டாண்மை

- Prime Minister Narendra Modi and Australian Prime Minister Anthony Albanese signed a series of agreements to deepen India-Australia ties in civil nuclear energy, defence, maritime security, critical minerals, cyber technology and trade
- The civil nuclear pact will enable Australia to supply uranium to India for its nuclear power projects, while both sides also agreed to strengthen cooperation in the Indo-Pacific, accelerate talks on the Comprehensive Economic Cooperation Agreement (CECA)

- 2026-ஆம் ஆண்டு நடைபெற்ற 3-வது இந்தியா–ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சி மாநாட்டின் போது, இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் இந்தியா–ஆஸ்திரேலியா சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் ஒரு நிர்வாக ஏற்பாட்டை இறுதி செய்தன.
- இந்த ஏற்பாடு, சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) பாதுகாப்புகளின் கீழ், அமைதியான அணுசக்தி நோக்கங்களுக்காக ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவிற்கு நீண்ட கால யுரேனியம் ஏற்றுமதியை செயல்படுத்துகிறது.
- இந்த ஒத்துழைப்பானது, 2014-ல் கையெழுத்திடப்பட்ட இந்தியா-ஆஸ்திரேலியா அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதுடன், இது ஆஸ்திரேலியா இந்தியாவிற்கு யுரேனியத்தை வழங்க அனுமதிக்கிறது.
- அணுசக்தி விநியோகஸ்தர்கள் குழுவில் (NSG) இந்தியா இணைவதற்கு ஆஸ்திரேலியா ஆதரவளித்ததுடன், தூய்மையான ஆற்றல் மற்றும் ஆற்றல் பாதுகாப்புத் துறைகளில் ஒத்துழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவில் கிளி போர்னா வைரஸ் 4 (PaBV-4)




- குவஹாத்தியில் உள்ள அசாம் கால்நடை மற்றும் மீன்வளப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், இந்தியாவில் முதன்முறையாக கிளி போர்னா வைரஸ் 4 (PaBV-4)-ஐக் கண்டறிந்துள்ளனர்.
- PaBV-4 என்பது ஆர்த்தோபோர்னாவைரஸ் ஆல்ஃபாப்சிட்டாசிஃபார்ம் (Orthobornavirus alphapsittaciforme) வகையைச் சேர்ந்த ஒரு பறவைகளைத் தாக்கும் வைரஸ் ஆகும் என்பதோடு இது கிளிகளில் புரோவென்ட்ரிகுலர் டைலேஷன் டிசீஸ் (PDD) என்ற ஒரு நோயை ஏற்படுத்துகிறது.
- PDD நோயானது பறவைகளின் செரிமான மற்றும் நரம்பு மண்டலங்களைப் பாதித்து, விரைவான உயிரிழப்புக்கு வழிவகுக்கக்கூடும்.
- கூண்டில் வளர்க்கப்படும் கிளி இனப் பறவைகளிடையே இந்த வைரஸ் கண்டறியப் பட்டுள்ளதுடன், இது பறவை வளர்ப்பு மற்றும் கிளி பாதுகாப்புக்கு அபாயங்களை ஏற்படுத்துகிறது.
- இந்த ஆய்வில், அசாம், கர்நாடகா மற்றும் மேற்கு வங்காளம் முழுவதும் உள்ள 13 இனங்களைச் சேர்ந்த 83 பறவைகள் பரிசோதிக்கப்பட்டன என்ற நிலையில் அவற்றில் 44 பறவைகளுக்கு நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## முழு எழுத்தறிவு நிலை – உத்தரகாண்ட்

- 'உல்லாஸ் – நவ பாரத் சாக்சரதா கார்யக்ரம்' (புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம்) - இன் கீழ், இந்தியாவின் ஆறாவது முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக உத்தரகண்ட் மாறியது.
- இம்மாநிலம் 98% அல்லது அதற்கும் அதிகமான எழுத்தறிவு விகிதத்தை எட்டி, முழு எழுத்தறிவுச் சான்றிதழ் பெறுவதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்தது.
- இதற்கு முன்னதாக, மிசோரம், கோவா, திரிபுரா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்கள் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலங்களாக அறிவிக்கப்பட்டன.
- இத்திட்டத்தின் கீழ், 15 வயதுக்கு மேற்பட்டவர்களிடையே குறைந்தது 95% என்ற அளவில் வயது வந்தோர் எழுத்தறிவு விகிதத்தை எட்டிய பிறகு, ஒரு மாநிலம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக அங்கீகரிக்கப்படுகிறது.
- இத்திட்டத்தின் கீழ் முழு எழுத்தறிவுச் சான்றிதழைப் பெற்ற முதல் ஒன்றியப் பிரதேசமாக லடாக் திகழ்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★